விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 5458
Phone No. 4502

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (16—9—49) வெளியூர் (17—9—49) | இதழ் 38

மக்களாட்சியுமல்ல! மனிதப் பண்புமல்ல!

நீதிபதிகள் இருக்க, நீதிவழங்க இவர்கள் யார்?

மக்களைச் சிறையில் மடக்கி வதைக்கும் மனப்போக்கு மாறவேண்டும்!

குற்றங்களின் பட்டி வேண்டும் — சட்டப்படி தண்டனையும் தரவேண்டும்!

வல்லூறு, புறுவைக்கண்டால், விடாது. விரட்டி விரட்டி அடித்து, பற்றி, சித்திரவதை செய்து, தன் பசிதணியும். கீச்கீச் என்று கத்தினலும்-கதறினலும், புறுவினிடத்தில் இரக்கம் காட்டாது வல்லூறு. அதன் இயல்பு அது!

மருண்ட விழிகொண்ட மானை-மகளிர் விரும்பி விளையாடும் புள்ளி மானை-புலி காண நேர்ந்தால், மானின் அழகில்-மருண்ட விழியில்-துள்ளித் துள்ளி ஓடும் ஓட்டத்தில்-மயக்கம் கொள்ளாது. பதுங்கிப் பாய்ந்து, மானின் குருதியைக் குடித்து மகிழ்ந்து, ஊனை உருசியாக உட்கொள்ளும். மானின் சாதுத்தன்மை, புலிக்கு இரக்கத்தை உண்டாக்குவதற்குப் பதில், மானைக்கண்டதும் அலட்சியமாக அடித்துக்கொல்லும் ஆவத்தைக் கொடுக்கிறது. மேலும் புலியின் இயற்கையும் அதுதான்!

பூனையின் பார்வையில் பட்டுவிட்ட, சுண்டெலி, தப்பிப் பிழைப்பதெங்கே! பூனையின் பிறவிக்குணம் அது!

*

காட்டு முறை இது! பலம் மிக்க பிராணிகள், தம்மிலும் பலக் குறைவான ஜந்துக்களை அடித்துக் கொல்வதும்—ஆகாரமாகக்கொள்வதும், இயற்கையிலே ஏற்பட்டுவிட்ட மாற்ற முடியாத அக்கிரமமாகும். இதற்காக அதிகக் கவலை எடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு மக்களுக்கு இல்லவுமில்லை. விலங்குகளிடை உள்ள காட்டு நீதியை, மாற்றியமைக்க முயலாததால், மனித சமுதாயத்தைக் குறை கூறுவோர் இல்லவுமில்லை. குறை கூறுவதும் பொருத்தமாகவும் இருக்காது.

புலிக்கு, மானைக்காட்டிலும் அதிக பலமிருப்பதால், குற்றம் எதும் செய்யாத மானுக்கு மரணத் தீர்ப்பளிக்கிறது புலி!

வல்லூறுக்கு, மாடப் புறுவைக் காட்டிலும் வலிமை இருப்பதால், தவறேதும் செய்தறியாத சிறு பறவைக்கு, உயிர் நீக்கும் தண்டனை தருகிறது வல்லூறு!

பூனைக்கு, எலியைவிட ஆற்றல் இருப்பதால், தனக்குத் தீங்கிழைக்க நினைக்காத எலிக்கு, இறப்பைத் தருகிறது தீர்ப்பாக!

பலம்! பலம்! பலம்! இயல்பாக அமைந்துள்ள பலம் வல்லூறுக்கும், புலிக்கும், பூனைக்கும் இருக்கிற காரணத்தால், அவைகள் செய்யும் கொலைத் தொழில்-காட்டில் வாழ் மிருகங்களிடை நீதியாக - நேர்நீதியாக இருந்து வருகிறது.

மக்கள் சமுதாயம், காட்டு மிருகங்களில் இருந்து மாறுபட்டு எவ்வளவோ காலம் - எத்தனையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. உருவ அமைப்பிலே மாறுதல், பேச்சிலே புதுமை, எழுத்திலே முன்னேற்றம், மூளை வளர்ச்சியிலே முற்போக்கு, நடைகொடி பாவனைகளிலே புரட்சி,-என்-எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் எதிர்பாரா வகையில் மாறுதல் அடைந்துவிட்டிருக்கிறது மனித சமுதாயம். அந்தோ! மனவளத்திலே மட்டும், மற்றவற்றில் ஏற்பட்டுள்ள நிலைக்கு ஈடாக - நேர் சமமாக, - மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

வல்லூறு, புலி, பூனை, - நீதி வழங்கப் பலத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது போல், பொதுவாகப் பெரும்பாலோரும் குறிப்பாகச் சிலரும்; தேக பலத்தைமட்டும் என்றல்ல-பலம் தரும் சில சாதனங்களால் ஏற்படும் பலத்தை மட்டுமே, மற்றவர்களுக்கு நீதி வழங்க, அடிப்படையாகக் கொள்ளுகிறார்கள். மிருகப் பண்புக்கு மனிதஉருவம் போட்டு மூடப்பட்டிருக்கிறது! அவ்வளவுதான்!

அதிகாரம் பெற்றுள்ள ஆளவந்தார்கள், பலம் - அதிகாரம் - ஒன்றையே, மக்களுக்கு - மாறுபட்ட கருத்தினருக்கு, நீதி வழங்கும் சாதனமாகக் கொண்டு இருக்கிறார்கள் என்றுதான், அவர்கள் போக்கை அறிந்தவர்கள் கூறுவர். மாறுபட்ட கருத்தினர்கள் மீது அவர்கள் சுமத்தும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், மாறுபட்ட கருத்தினர்களுக்கு, அவர்கள் செய்த அல்லது செய்ததாகச் சொல்லப்படும் குற்றங்களை உணர்த்தாமலே சிறையில் தள்ளிவைக்கும் போக்கு, அது குறித்துத் தட்டிக்கேட்கும் நபர்கள்மீது செலுத்தும் சந்தேகப் பார்வை, முதலியனவெல்லாம், பெற்றிருக்கும் அதிகாரத்தைத்தான்-அதனல் ஏற்பட்டுள்ள பலத்தைத்தான்-நீதிவழங்கும் முறையாகக் கொண்டிருக்கிறார்கள் ஆளவந்தார்கள் என்பதை உறுதியாக்கிநிலைக்கச்செய்கின்றன.

நீதியின் விளக்கமும், அதனை ஒழுங்காக்கி அமைத்துள்ள

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

ஆயிரம் அணுகுண்டுகள் தயாராகும்

அமெரிக்காவின் இரண்டாண்டுத் திட்டம்

மாஸ்கோ 'மரண ஒளி' பரப்புமாம்!

ஆயிரம் அணுகுண்டுகள் தயாரிக்க அமெரிக்கா திட்டமிட்டு வேலை செய்துவருகிறது.

இந்தத் திட்டத்தைஇன்னும் இரண்டாண்டுகளிலே, வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் வேகத்திலே இப்போது வேலை நடைபெறுகிறது.

ஆயிரம் அணுகுண்டுகள், தேவைப்படுமாம், ரஷியாவை அழிக்க; அதற்காகவே, அமெரிக்கா, இந்த அளவு அணுகுண்டுகளைத் தயாரிக்க முனைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

போர் முடிந்தபிறகு, அமெரிக்கா, போர்க்கோலத்தைக் கலைக்காமல், யுத்தக்கருவிகளைச் செய்து குவித்தவண்ணம் இருப்பதாகப் புகார் கூறப்பட்டது. ஜப்பானைப் பணியவைக்க, அமெரிக்கா கண்டுபிடித்து, உபயோகித்த, பயங்கரக்கருவியாகிய, அணுகுண்டு உற்பத்தியில், அமெரிக்கா மும்முரமாக ஈடுபட்டு, வருகிறது என்றும், உலக சமாதானத்துக்கு, உதட்டளவு உபசாரம் காட்டிடும் அமெரிக்கா, உலகை மிரட்டி—அடிமைகொள்ள, அணுகுண்டுகளை உபயோகிக்கும் என்றும் கூறப்பட்டது. இவை எல்லாம், சோவியத் சாடுகள்—மாஸ்கோ புளுகுதல், என்று, அமெரிக்கா பிரசாரம் செய்தது.

ஆனல், அணுகுண்டுகள் தயாரிப்பது நிறுத்தப்பட்டது என்று அமெரிக்கா சொல்லவில்லை.

அணுகுண்டு உற்பத்திமுறை, தனக்குத்தான் தெரியும், உலகில் வேறு யாருக்கும் தெரியாது என்று பெருமை பேசியபடியேயும் இருக்கிறது.

சோவியத் ஒற்றர்கள், அணுகுண்டு செய்யப்படும் முறையை அறிய, கள்ளத்தனமாக முயன்று வருவதாக, அமெரிக்கா அவ்வப்போது புகார் கூறியபடியும் இருந்து வந்திருக்கிறது.

இவைகளைக் கவனிக்கும்போது, அமெரிக்கா, அணுகுண்டு தயாரிக்கும் போக்கிலே தான் இருக்கிறது என்பது தெளிவாகிறது.

இப்போதே அமெரிக்காவிடம், 250 அணுகுண்டுகள் உள்ளன வென்று கணக்கிட்டுச் சிலர் கூறுகின்றனர்.

இன்னும் சிலர், 450 அணுகுண்டுகள் உள்ளன, என்று கூறுகின்றனர்.

ஹிரோஷிமா நகரை நாசமாக்க, ஒரு அணு குண்டுதான் தேவைப்பட்டது. இவ்விதமான பயங்கரக் கருவி, 450 உள்ளனவாம் அமெரிக்காவிடம்.

உலக சமாதான கீதம் பாடிடும் அமெரிக்கா, உலகை அழிக்க இவ்வளவு அணுகுண்டுகளையும் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறது.

இது போதாதாம்! எனவே சோவியத் ரஷ்யாவைப் படுசூரணமாக்கவேண்டும் என்ற அமெரிக்கத் திட்டத்துக்கு, குறைந்தது, ஆயிரம் அணுகுண்டுகள் வேண்டுமாம்.

ஒரு லட்சம் மக்களாவது உள்ள பெரிய நகரங்கள், பிரம்மாண்டமான தொழிற்சாலைகள் உள்ள பட்டினங்கள் ஆகியவற்றின் மீதுதான், அணுகுண்டுகளை வீசுவது, என்பதுதான் இராணுவத் திட்டம்.

இப்படி, அணுகுண்டு வீசப்படுவதற்கு இலக்காக, சோவியத் ரஷியாவில் 81 இடங்கள் உள்ளன; ஆனல் அவைகளில் மாஸ்கோ போன்ற சில நகரங்களின் மீது மூன்று நான்கு குண்டுகள் வீசப்படவேண்டி வருமாம்.

சோவியத் ரஷியா முழுவதையும் அழிக்க, ஆயிரம் குண்டுகள் தேவைப்படும் என்று ராணுவ நிபுணர்கள், கணக்கிட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவைகளைச் செய்துமுடிப்பதற்கான 'காலம்' வரையில் தான், சமாதானச் சங்கம், சமரசத் திட்டம் என்பவைகள்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

ரஷ்யாவின் உறவு

நாட்டுக்கு நலன் தருமாறு பணியாற்றுக

இந்தியாவும் ரஷ்யாவும் விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும், என்று ரஷ்யாவிலுள்ள இந்தியத் தூதர் அறிவித்துள்ளார்.

இந்த வர்த்தக ஒப்பந்தம் நிறைவேறுவது மட்டுமன்று, ரஷ்யாவின் சுகாதாரத் திட்டங்கள், உணவுஉற்பத்தி முறைகள், கிராமச் சீரமைப்பு முறைகள் முதலியவற்றை இந்திய மாணவர்கள் கற்றுத்தேர்ந்து அவற்றை இந்தியாவில் மேற் கொள்ளுவதற்கான வசதிகளை ஏற்படுத்தவும் இந்தியத் தூதர் முயல்வது இன்றியமையாத தேவையாகும்.

ரஷ்யாவிலே, மழையினை எதிர்நோக்காமலே, நன்செய் புன்செய் என்ற பிரிவினைகளைக் கருதாமலே, மலைச் சரிவு நிலங்களாயிருந்தால்கூட, சத்து மிக்க அரிசி விளையுமாறு அங்குள்ள விஞ்ஞானிகள் விளைச்சலில் புது முறைகளைக் கண்டுள்ளார்கள்.

மக்கள் பிணியற்று வாழ்வதற்காக, பிணிகளை வாராமல் தடுப்பதற்காக, வந்தால், விரைவில் அகற்றுவதற்காக, சிறந்த முறைகள் அனுசரிக்கப் படுகின்றன.

கிராமங்கள் அனைத்தும் நவீன கால வசதிகளுடன் கூடியவைகளாக அமைக்கப் பட்டிருக்கின்றன.

இத் துறைகளிலும், இன்னும் மக்களின் வாழ்க்கை முறைக்காக அவர்கள் அனுசரித்து வரும் பிற நடைமுறைகளையும் நம்மவர்கள் கற்றுத் தேர்ந்து, நம் நாட்டில் அம் முறைகளைச் செய்து பார்த்து, நம் நாட்டை வறுமை — பிணி முதலிய தொல்லைகளினின்று காக்க. ரஷ்யாவின் உறவைப் பெரிதும் பயன் படுத்திக்கொள்ளும் வகையில் இந்தியாவின் தூதாதோ முறை எஸ் இராதாகிருஷ்ணன் முயற்சி செய்ய வேண்டும். இத்துறையை இந்திய அரசாங்கம் அக்கறை கொண்டு தொண்டாற்றுமா?

மாலை மணி

சென்னை 16—9—49 வெள்ளிக்கிழமை

'இந்தி'க்கு :: மகுடாபிஷேகம்!

'இராம ராஜ்யம்' உதயமாகிவிட்டது! மகுடாபிஷேகத் திருவிழாவும் நடந்தேறிவிட்டது!

அறியணை அனுமன் (திராவிடக் குழுமொழிகள்) தாங்க, அங்கதன (ஹிந்துஸ்தானி) உடைவாள் ஏந்த, பரதன (சமஸ்கிருதம்) வெண்கொற்றக் குடை கவிக்க, இருவரும் (குஜராத்தி-மராட்டியம்) கவரி வீச, இராமருக்கு (ஹிந்திக்கு) மகுடாபிஷேகம் சூட்டப்பட்டாகிவிட்டது!

இந்தியைத் இந்திய துணைக் கண்டத்தின் அரசியல் மொழியாக ஆக்கி - அதன் மூலம் பொதுமொழி ஆக்கி - அதன் மூலம தேசிய மொழியாக ஆக்கிவிடவேண்டும் என்று இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட வெறியர்களும், அவ்வெறியர்களுககு ஆதரவாளர்களாக இருப்போரும தங்கள் எண்ணததை எப்படியோ நிறைவேற்றிவிட்டார்கள் - தங்கள் முயற்சியில் வெற்றியும் பெற்றுவிட்டாரகள்.

வந்தவர்களையும்—வந்தவைகளையும வரவேற்று, அவர்களுககும்—அவற்றிற்கும, வளைந்து — பணிந்துகொடுக்கும் பண்பில், பரமபரையாகப் பழககப்பட்டுவந்த திராவிடநாட்டு உறுப்பினர்கள், இந்திமொழிப் பிரச்சினையிலும் வளைந்துகொடுத்துவிட்டார்கள்! இநதி மொழி அரியணை ஏற்றப்பட்டுவிட்டது! தமிழ்போன்ற தனித்தியங்கும் பிற மொழிகள் அடிமை நிலையில் வைக்கப்பட்டுவிட்டன! இனி இந்தி தீநதமிழ்நாட்டில் கோலோச்சும்! இந்திக்கு வாழ்வு அளிக்கப்பட்டுவிட்டது! தமிழ் சாக்கடையில் தள்ளப்பட்டுவிட்டது இன்றைய காங்கிரஸ் உறுப்பினர்களால்!

வடநாட்டிலே ஒரு பகுதியினரால் பேசப்படும் ஒரு மொழி மற்றப் பகுதிகளுக்கும் பரவி விளங்க வேண்டும் என்று, அம் மொழி பேசுவோர் ஆவலுற்றார்கள்; அதன் காரணமாக, அவர்கள் ஆதிக்கம் செலுத்தும் காங்கிரஸ் மூலமாக வற்புறுத்தினார்கள்; எந்த அளவுக்கு அந்த மொழி திராவிட நாட்டிற்குத் தேவை என்பதைக் கூட ஆய்ந்து பார்க்காமல், காங்கிரஸ் மேலிடத்தார் கட்டளையிடுகிறார்கள், ஆகவே, கண் மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டும் என்ற முறையில், திராவிட நாட்டுக் காங்கிரஸ் உறுப்பினர்கள், இந்தி வெறியர்களுக்கு இடங் கொடுத்துவிட்டார்கள். வளைந்துகொடுக்கும் சுபாவம்! இத்தகைய சுபாவம் இங்கு ஒரு சிலரிடத்திலாவது இருப்பதைக் கண்டுதானே என்னவோ, வடநாட்டவர்கள், அந்தக் காலத்திலேயே, தென்னாட்டவர்களை ஹனுமான்-குரங்குகள் என்று அழைத்திருக்கிறார்கள்!

இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக இந்தி தேவநாகரி லிபியில் இனிப் பயன்படுத்தப்படும என்ற ஷரத்து, அ. நி. சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாகாண அதிகாரங்களில ஏராளமானவற்றைத் தனனகத்தே கொண்டிருக்கும மத்திய யூனியன் அரசாங்கம், நாளடைவில், மாகாணங்களுககும் இந்தியையே ஆட்சிமொழியாக அமைத்துப் பிரதேச மொழிகளுக்கு எவ்வித வாய்ப்பும் கொடுக்காமல், பிரதேச மொழிகளை ஒழித்துக் கட்டும் முயற்சியில் இறங்கவும் கூடும்! அந்த முயற்சிக்கும தென்னாட்டு உறுப்பினர்கள் வளைந்து கொடுத்தாலும கொடுப்பர்! வடநாட்டுத் தலைவர்களின் கூற்றிலே படிந்த மோகம, இங்குள்ள காங்கிரஸ் காரர்களுககு இன்னமும்தான் நீங்கவில்லையே!

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தாய்மொழியாகிய தமிழ் அடிப்படை- சூழ்நிலை- பொது அறிவு பெற ஏற்ற வசதி அளிககிறது. தமிழால் நிறைவேற்றித் தரமுடியாத உலகியல் அறிவு—விஞ்ஞான அறிவு- உலகக் கூட்டுறவு ஆகியவற்றைக் கொடுத்துதவ வேறோர் மொழி தேவை. அந்தத் தேவையை நிறைவேற்றித்தரும் எல்லா ஆற்றலும படைத்த மொழி ஆங்கிலம் ஒன்றேதான். ஆங்கிலத்தால் நிறைவேற்றித்தரப்படும் தேவைகளை, இந்தியால் நிறைவேற்றித்தர இயலுமா என்றால், முடியாது! ஆங்கிலத்தால்தான் முடியும், ஆங்கிலம் ஒன்றினால்தான் முடியும்.

இந்த நிலையில் தமிழர்களின் — திராவிடர்களின் பொது நேரம் — பொது நினைப்பு—பொது உழைப்பு—பொது ஆற்றல் அனைத்தும் தமிழுக்கும ஆங்கிலத்துககும் மட்டும செலவழித்தால் போதும்; வேறு மொழி எதுவும் பொதுப்படையாகத் தேவையில்லை. தனிப்பட்ட முறையில் ஒருவர் தன் விருப்பம்போல் எவ்வளவு மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளட்டும். அதைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. நாட்டையும், நாட்டு மக்களையும், நோக்கும் போது தமிழ் ஆங்கிலம் இரண்டு மட்டும் போதும் என்ற தெளிவு தான் நல்லறிவாளர்களுக்கு ஏற்படும். உலகத்தோடு தொடர்பு கொள்வதற்கு என்று வைத்துக் கொண்டுள்ள ஆங்கிலமே, இந்தியாவிலுள்ள வடநாட்டோடும் தொடர்பு கொள்ளப் பயன்படுத்திக் கொள்ளலாமே! வடநாட்டோடு தொடர்பு கொள்வதற்கென்று தனிமொழி- இந்தி என்ற ஒன்று தேவையில்லையே!

வடநாட்டவரின் வெறியுணர்ச்சிக்காகவும்- பிறமொழி வழங்கும் தேசியப் பகுதிகளை அழித்து, இந்தி தேசியப்பகுதியாக அவற்றை ஆக்குவதற்குமே இந்தி நுழைக்கப்படுகிறது திராவிடநாட்டில்.

திராவிடநாட்டிற்கு இந்தி எவ்வகையிலும் பயன தராத மொழி-அவசியமற்ற மொழி. மேலும் அது வளப்பமற்ற மொழி, பண்பாடு குறைந்த மொழி, இலக்கண இலக்கியம் நிரம்பாத மொழி. அத்தகையவொரு மொழி வலுக்கட்டாயமாகத் தமிழர்கள்மீது திணிக்கப்படுமேயானால், வடமொழியால் தமிழ் தன வளப்பத்தை இழந்ததும்போல, மீதப்பட்டிருககுமகொஞ்சநஞ்சத் தமிழும இந்தியால் நிச்சயம் அழிககப்பட்டுப்போகும் என்பதுமட்டும உறுதி. இந்த உண்மையை நன்கு உணர்ந்துகொண்ட காரணத்தினாலதான், சென்னை மாகாணத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக் காரர்கள், எதிர்ப்புணர்ச்சிகளைக காட்ட வேண்டிய அவசியம ஏற்பட்டது.

தமிழ் நாட்டவரின மனப்போக்கு இந்தியை வரவேறபதாக இல்லை எனபதை, அ. நி. சபையில சுட்டிக் காட்டும் போது, டாகடர் பி. சுபபராயன அவர்கள தம் பேச்சில்,

"இராஜகோபாலாச்சாரியார் சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த போது நான் கல்வி மந்திரியாக இருந்தேன். அப்பொழுது இந்தி பள்ளியில் பாட மொழியாக வைக்கப்பட்டது. மூன்று மாதங்களுக்கு மேலாக இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்கள் 'தமிழ் வாழ்க', 'இந்தி ஒழிக', 'ராஜாஜி ஒழிக', 'சுப்பராயன் ஒழிக' என்ற முழக்கங்களை எழுப்பினார்கள். தென்னிந்திய மக்களிடத்தில் அம்மாதிரியான உணர்ச்சி அப்பொழுது பரவியிருந்தது"

என்று குறிப்பிட்டுள்ளார். இந்திமொழிப் பிரச்சினை குறித்துத் தமிழ்நாட்டவர்கள் என்ன மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள் என்பதற்குத் தோழர் பி. சுப்பராயன் அவர்கள் எடுத்துககாட்டாக, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தென்னாட்டவரின் மனப்பாங்கை, ஆதிக்க வெறிபிடித்த வடநாட்டுத் தாண்டன வகையறாக்கள் எப்படி உணருவார்கள்? எப்படி உணாவதாக ஒப்புக்கொள்வார்கள்? ஆகவேதான் தோழர் சுப்பராயன் அவர்களுடைய பேச்சு, வடநாட்டவர்கள் செவியில் விழுந்ததாகவோ, அவர்கள் உள்ளத்தைத் தொட்டதாகவோ தெரியவில்லை!

"விரும்பாத மக்கள்மீது மொழியைத் திணிக்கக்கூடாது"

என்று அ. நி. சபையில் பேசும்போது பண்டித நேரு அறிவுரை பகர்ந்துள்ளார். தமிழகம், இந்தியை அறவே இன்று வெறுக்கிறது. அந்த வெறுப்புணர்ச்சியை அ. நி. சபையிலுள்ள தென்னாட்டு உறுப்பினர்கள் அறிவித்திருந்தால், தமிழகத்தில் இந்தியைப் புகுத்த பண்டித நேரு உடன்பட்டிருப்பாரா, உள்ளபடியே அவர் கூற்றுக்கே அவரே மதிப்பு கொடுப்பவராக இருந்தால்!

எப்படியோ 'இந்தி'க்கு மகுடாபிஷேகம் சூட்டப்பட்டாகிவிட்டது! 'இராமராஜ்ய' ஆட்சி தொடங்கி விட்டது! 'இராம ராஜ்யம்' முழுத் தோற்றத்தோடு இன்று காட்சியளிக்கிறது! தெனனாட்டு 'அனுமார்கள்' அது கண்டு மகிழ்கின்றன! 'தமிழை' அடகு வைத்து விட்டு, அடிமைச் சாஸனத்திலும் கையெழுத்திட்டு விட்டார்கள் தென்னாட்டு உறுப்பினர்கள்! அவ்வளவு தானே அவர்களால் செய்யமுடிகிறது! என் செய்வது!

காந்தியாரின் கூற்றுகளையே வட நாட்டுத் தலைவர்கள் காற்றில் பறக்க விடும் போது, தென்னாட்டவரின் இதய ஒலியைக் கேட்கவா போகிறார்கள் அந்த வெறியுணர்ச்சி கொண்ட வட நாட்டவர்கள்!

இன்று ஆதிக்கம் ஆட்சி புரிகிறது; அறிவு அடங்கிக்கிடக்கிறது. அறிவு ஆளத்தொடங்கும்போது சூது, சூழ்ச்சி, வஞ்சகம், ஆதிக்கம், அடக்குமுறை எல்லாம் தூள்! தூள்!! தூளே!!!

'கற்காலம்'

நாடகமேடை ஏறி, நடிகர்களைத் தாக்குமளவுக்கு, கெடுமதியுடன் நடந்துகொண்டனா, முன்பு, விழுப்புரத்திலுள்ள, காங்கிரசாரில் சிலர். தங்களுக்குப் பிடித்தமல்லாத, கருத்துக்களைக் கூறுகிறார்கள், என்ற காரணத்துக்காகக் கலகம் செய்வது, காட்டுமிராண்டிப்போக்கு- கண்ணியத்தின் அறிகுறியல்ல. காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும், தவறானவை, தீதுபயப்பவை என்று மனமார நம்புவதனாலே, அவைகளைக் கண்டிக்கிறோம்-தேர்தலுக்காக அல்ல, பதவிக்காக அல்ல, நாட்டிலே நல்லாட்சி அமைய வேண்டும் என்பதற்காகக் கண்டிக்கிறோம்; நாம் ஆளவந்தார்கள் ஆகவேண்டும் என்பதற்காக அல்ல. இந்த உண்மையை உணர மறுப்பவர்கள் தங்களைக் காங்கிரசின் பாதுகாவலர்கள் என்றும், காங்கிரசின் மீது யாரேனும் ஓர் கண்டனச் சொல் வீசினால், உடனே அவர்மீது கற்களை வீசினால்தான் பாரதமாதா பூரிப்படைவாள் என்றும் எண்ணிக்கொண்டு, காங்கிரசுக்கு மாறுபாடான கூட்டங்கள் நடைபெற்றால் காகூவெனக் கூச்சலிட்டுக் கலாம் விளைப்பதை வீர தீரச் செயல் என்று எண்ணிக்கொண்டுள்ளனர்.

அவர்கள் அறிய மறுக்கிறார்கள், இது அநாகரிகச் செயல் என்பதை. அரும்பிடும் ஜனநாயகத்தை அழிக்கும்செயல் இது. அறிவுத் தெளிவுடையோர், வெறுக்கும் செயல். நாட்டைக் காடாக்கும் நாசகாரியம்.

இம்முறையிலே, சில திங்களுக்குமுன்பு, ராதா நாடகக் குழுவினர் விழுப்புரத்தில் பகுத்தறிவுப் பிரசார நாடகமாடிய போது, மேடை ஏறிச்சென்று தாக்கினர்.

காங்கிரஸ் தலைவர்கள் இதனைக் கண்டித்திருக்கவேண்டும். கலாம் விளைவித்தவர்களை கண்டுபிடித்துக் கண்ணியமற்ற செயலில்ஈடுபட்டதற்காக அவர்களைக் கட்சியிலிருந்தே விலககியிருக்க வேண்டும். அதுபோலச் செய்திருந்தால், கட்சிக்கும் கண்ணியம் உயர்ந்திருக்கும், நாட்டுக்கும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

இதுபோலச் செய்யாமல், வேடிக்கை பார்த்தனர். விலங்கு நிலைக்கு மக்களைத் தாழ்த்தும் செயலாயிற்றே இதனை வளாவிடலாமா என்று எண்ணவில்லை.

அன்று கலாம் விளைவித்தவர்கள் மீது சட்டமும் பாயவில்லை.

எனவே, அவர்களுக்கு துணிவு அதிகமானதுடன இந்த காரியத்தை, வீரம் என்று தவறாக எண்ணிக் கொள்ளும போக்கும் ஏற்பட்டுவிட்டது.

திராவிடர் கழகத்திலே இது போது ஏற்பட்டுள்ள பிளவு நிலைமையும், இந்தச் சமயத்தில், அவர்களுக்குச் சாதகமாகிவிட்டது. எனவே, 11-9-49 அன்று விழுப்புரத்தில் பெரியார் பேசிய கூட்டத்திலே கலவரம் விளைவித்து, காட்டாட்சி செய்தனா.

இது எவ்வளவுகேவலமானது என்பதைக் காங்கிரஸ் தலைவர்கள், உணர மறுக்கிறார்கள்; வம்பை விதைக்கிறார்கள்.

பெரியாரின் பிரசாரம், திராவிடர் கழகத்தாரின் பிரசாரம், காங்கிரசாருக்குப் பிடிக்காமலிருக்கலாம்-கண்டிக்கத் தோன்றக்கூடும் அவர்களுக்கு. ஆனால், கண்டனம், கல் உருவிலேதானா கிளம்பவேண்டும்? உலகம், கற்காலத்தைத் தாண்டி, எவ்வளவோ முன்னேறிவிட்டிருக்க, விழுப்புரத்திலுள்ள சில காங்கிரசார்மட்டும் இன்னமும், கற்காலவாசிகளாகவே இருந்துவருகின்றனரே! என்ன பேதமை!! ஏன் இந்த விபரீதச் செயல்? இந்தச் செயல் புரிந்தோர், சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம். அறிவுப் பிரசாரத்தை இந்த அநாகரிக முறையினாலே, அழித்துவிட முடியுமா! உலக வரலாறு காட்டும் பாடத்தையுமா, இவர்கள் மறந்துவிடுவது? வேண்டாம் இந்த வெறியாட்டம் என்று கூறுகிறோம்; காட்டிலே காட்டு முறையைப் புகுத்தும் போக்கைக் கண்டிக்கிறோம். காங்கிரஸ் தலைவாகள், தங்கள் சீடகோடிகளில் சிலருடைய போக்கு இவ்வளவு சீரழிவாக இருப்பதைக்கண்டிக்கவேண்டும், நாட்டின் பொது கண்ணியத்தை உத்தேசித்து. பொது வாழ்வு அமளிக்கு இருப்பிடமாகிவிடும் போக்கு வளராதபடி, அதிகாரிகளும், கவனித்து ஆவன செய்ய வேண்டும். இந்தக் 'கற்கால'ப் போக்கைக் கண்ணியவான்கள் யாவருமே, கண்டிக்க வேண்டும்-நாட்டின் கண்ணியத்தைக் காப்பாற்ற.

குதிரைக்குக் கொம்பு முளைக்குமா?

நம்நாட்டில் இன்றுள்ள நிலைமையில் தொழில்கள் நடைபெறும் போக்கு, அவை வளர்ச்சிபெறுமென்றோ, நாட்டிற்கு நலன் உண்டாகுமென்றோ கருதுவதற்கு இடமில்லாதபடி அமைந்திருக்கிறது.

தொழிற்சாலைகளை வைத்துநடத்தும் முதலாளிகள்,

"தொழிலாளரின் கூலிவிகிதங்கள் பெருகியுள்ளன; மூலப்பொருள்களின் விலை ஏறியுள்ளன. இதனால் உற்பத்திச் செலவுமுன்னைவிடப் பன் மடங்கு பெருகிவிட்டது. தயாரிக்கப்படும் பொருள்களின் விலை உயர்ந்துவிடுவதால், வாங்குவோரற்று, பொருள்கள் தேங்கி, பண நடமாட்டம் குறைகிறது. மேலும் அரசாங்கம் புதிய புதியவரிகளைப் போடுவதால் தொழில்களில் புதிதாக மூலதனம் போட அச்சமேற்படுகிறது"

என்று கூறுகின்றனர் என்பதாக, தொழிற்சாலைகளின் அ. இ. நிலைய 16-வது மாநாட்டில் திரு. சாந்திபிரசாத்ஜெயின் என்பவர் தெரிவித்தார்.

'விலைவாசிகள் உயர்ந்து வாழ்க்கைச் செலவு பெருகிவிட்டதால் கூலிவிகிதங்களை உயர்த்திக்கொடுத்தாலன்றி உயிர் பிழைப்பதே சங்கடத்தில் முடியுமாகையால், தங்கள் கூலிகளை எந்த விதத்திலும் குறைக்கக்கூடாதென்பது மட்டுமல்ல; விலைவாசிகளின் உயர்வுக்கேற்றபடி கூலியையும் உயர்த்தித்தர வேண்டுமென்று" தொழிலாளர்கள் விரும்புகின்றனர்.

தொழிலாளரும் முதலாளிகளும் சேர்ந்து உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்கிப் பயன்படுத்தும் மக்களோ, "உற்பத்திப் பொருள்களின் விலைவாசிகள் தங்களுடைய வாங்கும் சக்திக்கு மேற்போய்விட்டனவாகையால், அவற்றைப் பயன்படுத்தக் கூடிய அளவு வருமானம் தங்களுக்குக் கிடைக்காமையால் வாங்க முடியாது" என்கின்றனர்.

இந்நிலையில் பொருள்கள் தேங்குவதும், பணநடமாட்டம் தடைப்படுவதும், தொழில்கள் நடைபெற முடியாமல் முட்டுக் கட்டை ஏற்படுவதும் இயற்கை.

எனவே, இந்தச் சிக்கல்கள் தீர வேண்டுமானால், ஹென்றி போர்டு தம் மோட்டார் தொழிலைப் பெருக்கக் கையாண்ட முறையே சிறந்தது. முதலில் தம் இலாபத்தைப் பற்றிக் கருதாமல் மக்களின்

வாங்கும் சக்தியைக் கவனித்து, தொழிலாளரின் நம்பிக்கையும் கூட்டுறவும் என்றுமிருக்கும் வகையில் வேலைசெய்து தம் தொழிலைப் பெருக்கினர் அவர். அதே போன்று இந்திய முதலாளிகள் இலாபம் ஒன்றையே மனத்திற் கொண்டு தொழில் நடத்தும் போராசைப் புத்தியை விட்டுத் தொலைத்து இலாபத்தைக் குறைத்துக் கொண்டு, உற்பத்திப் பொருள்களின் விலைவாசிகளைக் குறையச் செய்தல் வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம், உற்பத்திப் பொருள்கள் மக்களிடையே நிறையச் செலவாவதன் மூலம் முதலாளிகளும் இலாபமடைய முடியும். தொழிலாளரும் நலன் பெறக்கூடும். எனவே தான் இந்திய அரசாங்கத் தொழிலமைச்சர், முதலாளிகள் தங்கள் இலாபவேட்கையை முதலில் குறைத்துக் கொண்டு, இடைத் தரகர் ஏற்பாட்டையும் ஒழித்தால், உற்பத்திப் பொருள்களின் விலை குறைந்து விற்பனை பெருகி, பல தொல்லைகள் நீங்க வழிபிறக்கும் என்று கூறினர்.

ஆனால், எந்த முதலாளியாவது நம் நாட்டில் தம இலாபத்தைக் குறைத்துக் கொள்ளத் தாமாக முன்வருவாரா? குதிரைக்குக் கொம்பு முளைத்த தென்றாலும் நம்பலாம். முதலாளி இலாபத்தைக் குறைத்துக் கொள்ள முன்வருவார் என்று நம்பமுடியுமா? சாண்டிச் சாண்டி, இலாபமடித்தடித்து ருசிகண்ட பூனைகள் இனிமேலும் இலாபமடிக்கத் தாவாமலா இருக்கும். எனவே, அரசாங்கமே இத்துறையில் முனைந்து நின்று, முதலாளிகளின் இலாபத்தைக் குறைத்து, உற்பத்திப் பொருள்களின் விலைவாசிகளை நிர்ணயித்து, தொழில்கள் வளம் பெறுமாறு செய்ய வேண்டும். அறிவுரை புகட்டுவதைவிட ஆக்கவேலை ஆற்றுவதில் அமைச்சர் முக்கர்ஜீ இறங்கினால் தக்க பலன் காணலாம்.

பிழைக்கும் வழி

தொழில்துறைகளில் முன்னேற்றம் அடையாத நாடுகளில், மக்களுக்கோ, அன்றித் தொழிலாளர்களுக்கோ தக்க பயிற்சி அளிப்பதற்குரிய வேலை ஒழுங்கான முறையில் நடைபெறவில்லை என்றும், நம் நாடுகளின்பொருளாதாரத்தொழில் தேவைகளுக்கேற்ப, தொழிற் பயிற்சி அளிக்கும் முறையை நடைமுறையில் கொண்டுவரவேண்டுமென்றும், சிங்கப்பூர் சர்வதேசத் தொழிலாளர் மாநாட்டில் இந்தியப் பிரதிநிதியாகச் சென்றுள்ள திரு. எஸ். என். தாஸ் கூறினர்.

நம்நாட்டில்தொழிலாளர்களுக்கு மட்டுமன்று, கல்வி பயிலும் மாணவர்களுக்கும் தொழிற் பயிற்சியைச் சிறந்த முறையில் தரவேண்டியது இன்றியமையாததாகும். இந்நாட்டுக் கல்வித் திட்டத்தைக் கல்வி நிபுணர்கள் திருத்தியமைத்தல் வேண்டும். கைத்தொழிற் கல்வி- நல்ல முறையில் தொழிற் பயிற்சி பெறக்கூடியவாறுள்ள கல்வி-மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டு அக்கல்வியில் அவர் தேர்ச்சியடைந்து வெளியே போனவுடன், தொழிலாற்றும் திறமை உடையவர்களாக இருத்தல் வேண்டும். இந்த முயற்சிகளில் சென்னைப் பல்கலைக்கழகம் இறங்குமா?

ஆசிரியர் பயிற்சிக்கெனத் தனிக் கல்லூரி தேவையில்லை

ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காகத் தனிக் கல்லூரிகள் அமைத்து அவற்றில்,2-வருடப்படிப்பு, ஓராண்டுப் படிப்பு, என்று ஆசிரியர்களாக வர விரும்புபவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. இத் தனிக் கல்லூரி முறையை ஒழித்து, பள்ளிக்கூடப் படிப்பின் காலத்திலேயே ஆசிரியர்களாக வர விரும்புபவர்கள் (10-வது வகுப்பு முடிந்தவுடன் ஆசிரியர்களாகவிரும்புவோர்) 9,10-வது வகுப்பில் ஆசிரியப் பயிற்சிக்குரிய பாடங்களைப் படித்துக் கொள்ளுமாறு செய்தல் வேண்டும். அதே போன்று, கல்லூரிப் படிப்புப் படித்துப் பட்டம் பெறும் மாணவர்களுள் ஆசிரியர்களாக வர விரும்புபவர்களுக்கு அக் கல்லூரிப் படிப்புடனே ஆசிரியப் பயிற்சிப் படிப்புக்கும் வசதி இருக்குமாறு ஏற்பாடு செய்தல் வேண்டும். இதனால் மாணவர்களுக்கு வீணாக, இரண்டாண்டு, ஓராண்டு என மேற்கொண்டு காலத்தைக் கழிக்க வேண்டியதும் ஏற்படாது. அரசாங்கத்தாருக்கும் தனிக் கல்லூரிகள் வைத்து நடத்துவதன் மூலம் ஏற்படும் பணச்செலவும் குறையும். இதுவரை உயர்தரப் பள்ளி மாணவர்கள் "ஆப்ஷனல்" என விருப்ப பாடம் எடுத்துப் படித்தது போல, ஆசிரியர்களாகவரவிரும்புபவர்களுக்கென இத்தகைய பயிற்சித் திட்டத்தைப் பள்ளிக்கூடப் படிப்பின் காலத்தோடேயே சேர்த்துவிடலாம். கல்லூரியிலும் இப்படியே.

இதனை அரசாங்கத்தாரும், பல்கலைக் கழகத்தாரும் கவனிப்பரா?

நையாண்டி நீளுகிறது

"இந்தி, இரண்டே மாகாணங்களில் பேசப் படும் மொழி; இலக்கிய மற்ற மொழி; இலக்கண வரம்பிலாத மொழி; இந்தியாவின் பொது மொழியாக இருப்பதற்கேற்ற தகுதிகள் அற்ற மொழி"

என்னும் குற்றச்சாட்டுகளை இந்தி எதிர்ப்பாளர்கள் தமிழ் நாட்டில் கூறுகிறார்கள் என்றெண்ணிவிட வேண்டாம். அ. நி. சபையில் நடந்த மொழிப்பிரச்சினைப்போராட்டத்தின் போது, இந்தக்குற்றச் சாட்டுகள் அந்தச் சபைமெம்பர்களால் மிகத்தாராளமாகச் சுமத்தப்பட்டன.

இறைமையிருந்தும் ஒரு கட்சிச் சார்பில் நடைபெறும் அச்சபை, இந்தியைப் பொது மொழியாக்கும் வேலையை வெற்றிகரமாக நடத்திவருகிறது; 2மாகாணத்தவரின் மொழியை நாட்டு மக்கள் மீது திணிக்க ஏற்பாடு செய்கிறது. இடையிலே எண்களை எம்மொழியில் எழுதுவது என்பதற்காக ஒரு பெரும்போராட்டம்நடத்தும் நாடகமும் நடந்தது.

இப்போது இந்தி மொழி, தேவநாகரி லிபியுடன், சமஸ்கிருத-பார்சி வார்த்தைகளுடன், அரபி எண்களுடன், "மேஜை இருக்கிறான்" என்பது போன்ற இலக்கணத்துடன், இந்தியாவின் பொது மொழியாக ஆகப் போகிறது.

சென்னைலயோலாகல்லூரிபிரின்ஸிபால், ரெவரண்டு ஜெரோம் டிசௌஸா, இந்தியாவின் பொது மொழி மட்டுமன்று, உலகப் பொது மொழியாகவும் ஆகிவிடுமென்று தாம் நம்புவதாகக் கூறியுள்ளார்.

இந்தியை வேண்டாத தென்னாட்டு மக்கள்மீது அதைத்திணிக்க முயலும் பேர் வழிகள், ரெவரண்டு டிசௌஸா வின் பேச்சை ரசித்து மகிழ்ந்திருக்கலாம். ஆனால், இந்தியாவின் பொது மொழி ஆவதற்கே தகுதியில்லாத அம்மொழி உலக மொழியாகலாம் என்பதில் நையாண்டி தொக்கியிருக்கிறது என்றே நாம் கருதுகிறோம். நையாண்டிக்குரிய இந்தி மொழியை ஒரு [illegible]சி எதேச்சாதிகாரத்தால், வேண்டாத மக்கள் மீது திணிக்க முயல்வது போல், உலகத்தவர் மீதுமா திணிக்க முடியும்?

நினைவு நாள்.

சென்னை, செப். 14—

நமது இயக்கத் தோழர் எம். இராமையன் அவர்களின் தாயார் வள்ளியம்மாளின் முதலாண்டு நினைவு நாள், இன்று காலை தோழர் ராமையா இல்லத்தில் நடந்தது. பல தோழர்கள் கலந்து கொண்டனர். இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். மகிழ்ச்சி!

"புதுவாழ்வு" (அரசியல் வார இதழ்)

24—9—49 சனியன்று வெளிவருகிறது

நிர்வாக ஆசிரியர்: ஈ. வே. கி. சம்பத்

தனி இதழ் ... ரூ. 0—2—0

ஆண்டுக் கட்டணம் ரூ. 6—0—0

எல்லா ஊர்களுக்கும் விற்பனையாளர்கள் தேவை.

விபரங்கட்கு :—

நிர்வாகி, "புதுவாழ்வு"

34, வன்னியா தெரு.

கிருஷ்ணபுரம் :: சென்னை 24.

இந்தியாவின் பிரிட்டிஷ் தூதர் சென்னை வருகை

இந்தியாவில் பிரிட்டிஷ் தூதராக (ஹைகமிஷனா)நியமிக்கப்பட்டுள்ள ஸர் ஆர்ச்சிபால்டுநை, தம் மனைவியாருடன், செப்டம்பர் 18-ந்தேதி சென்னை வந்து 25-ந்தேதிவரை இங்கிருப்பார். இவர்கள் சென்னையிலுள்ள உதவி பிரிட்டிஷ் தூதர் திரு. ஜெ. டபிள்யூ, டி. லாக்கர் மாளிகையில் தங்குவர்.

'சாக்கலேட்' கிடைப்பது சங்கடம்

உலக மக்கள் பயன்படுத்தும் சாக்லேட்டில் (கோக்கோ) அரைப்பகுதி, தென் ஆப்பிரிக்காவின் கோல்டு கோஸ்டில உற்பத்தியாகிறது. ஆனால் 1956-வது ஆண்டு முடிவதற்குள் தென் ஆப்பிரிக்காவில் கோக்கோ உற்பத்தி முடிவடைந்து விடும் என்று தெரிகிறது. கோககோ மரங்களில், அங்குப்பூச்சிகள் பிடித்துப் பல மரங்கள் அழிந்து கொண்டு வருகின்றன.

அங்கு 40கோடி கோககோ மரங்கள் இருந்தன, 1938-ல்-10 லட்சம் மரங்கள பூச்சி பிடித்து நாசமாயின. 1947-க்குள் ஆண்டொன்றுக்கு 50 லட்சம் மரங்கள் விகிதம் அழிந்து கொண்டு வருகின்றன.

எனவே, இந்தப்பூச்சிகளை அழித்துக் கோக்கோ மரங்களைக்காக்காவிடின், இனிமேல் மக்களுக்குச் சாக்லேட்டுகள் இப்போது கிடைப்பது போலக்கிடைக்கமாட்டா. இவ்வாறு அம்மரங்கள் அழிவதைத் தடை செய்யப் பெருமுயற்சிகள் நடைபெறுகின்றன. இதுவரை மரங்கள் அழிந்தமையால் பெருநஷ்டமடைந்த விவசாயிகளுக்கு 12 கோடி ரூபாய் வரை நஷ்ட ஈடாக, ஆப்பிரிக்கக் கோக்கோ விற்பனை போர்டார் அளித்திருக்கின்றனர்.

இனி நடப்பவை

சென்னை—வன்னியர் குல வகுப்பினரைப் பிற்பட்ட வகுப்பின் பட்டியலிலிருந்து நீக்கப் போவதாக உத்தேசித்திருக்கும அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்கும் பொருட்டு மெமோரியல் மண்டபத் தெரு 12ம் எண் இல்லத்தில் 18-9-49 ஞாயிறு மாலை 4மணிக்கு ஒரு கூட்டம் நடைபெறும். தோழர் டி. எஸ். நடராஜம் பி. ஏ., பி. எல். தலைமை வகிப்பார்கள்.

* * *

சைதாப்பேட்டை—17—9—49 சனிக்கிழமை மாலை 6-மணிக்குப் பனையூர் குப்பத்தில், சோழவெல்லூர் மிராசுதார் தோழர் வேலு அவர்கள், தலைமையில் நடைபெறும் தோழர் G. ராஜமன்னார், B.A., M.L.A.T., அவர்கள சங்கத்தைத் திறந்து வைப்பார். தோழர் K. குப்புராஜ அவர்கள சங்கக் கொடியை ஏற்றிவைப்பார். தோழர் N. சண்முகனார் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் படத்தைத் திறந்து வைப்பார். தோழர் N. ஜீவரத்தினம் M. C. (சென்னைத் துறைமுக டிரஸ்ட் உறுப்பினர்) "மீன் பிடிப்போரின் நல உரிமை" என்பது பற்றி பேருரையும், அதைத் தொடர்ந்து தோழர்கள் N. N. நாதன், K. N. ஜெயராமன், S. R. சாண்டோ, P. பஞ்சாட்சரம் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றுவார்.

* * *

திண்டுக்கல் 18-9-49 மாலை 6-மணிக்கு திண்டுக்கல் மாரியம்மன் திடலில் திராவிடர் இயக்கப் பொதுக்கூட்டம ஒன்று நடைபெறும். 'தற்கால திராவிடர் நிலை' என்பது பற்றித் தோழர் எம். கே. குப்தா அவர்கள் பேசுவார்கள் கூட்டத்தில் ஒலிபெருக்கி அமைக்கப்படும்.

எதிர்கால வேலைத்திட்ட அமைப்புக் கூட்டம்

திராவிடர் கழகத் தோழர்களின் எதிர்கால வேலைத் திட்ட அமைப்புக்கான ஆலோசனைக் கூட்டம், 17—9—49 சனிக்கிழமை காலை 10-மணிக்கு, சென்னை பவழக்காரத் தெரு, 7-ம் எண் இல்லத்தில் நடைபெறும்.

பெரியார் போக்கினைக் கண்டித்துக் கருத்துரை வழங்கியுள்ள, திராவிடர் கழக மத்ய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் கூடிக் கலந்து பேசி, எதிர்கால வேலைத்திட்டம் பற்றி முடிவு செய்வர்

சி. என். அண்ணாதுரை.

மக்களாட்சியுமல்ல...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட நூற்களும், அதன்படி ஆராய்ந்து பார்க்க நீதிமன்றங்களும், குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால் அறங்கூறும் முறையில் தண்டித்துத் திருத்த உயர் நீதிபதிகளும், குற்றவாளிகளைக் காவலில் வைக்கச் சிறைக்கூடங்களும் காட்டிலே ஏராளமாக இருக்கின்றன. தவறிழைக்கும் தனி நபர்களை, இந்த ஒழுங்குமுறை வழியாகச் சென்று, தண்டிப்பது தான் நேர்மை; இதற்குத்தான் நீதி என்ற பெயரும் பொருந்தும். இந்த நீதிகாக்கும் பல சட்டங்களையும், தம் தம் விஷயத்திலும் நிறைவேற்றியாக வேண்டும் என்று கேட்கும் உரிமை, ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு, ஏன்? ஒவ்வொருவரும், இந்த ஆட்சியில் ஒரு பிரஜையாக இருக்கும் காரணத்தால் நீதி நூற்களைக் கண்டால் அச்சம்—நீதி மன்றங்களைக் கண்டால் கோபம்—நீதிபதிகளை நினைத்தால் நடுக்கம்—என்ற முறையில் ஆளவந்தார்கள் போக்கு இருக்கிறது. இதன் விளைவு, நீதி கொலை செய்யப்படுவதில் வந்து முடிகிறது.

பிரஜைகளின் உரிமைகள் பிறப்புரிமைகள்-பறிக்கப்படுகின்றன-இந்த வகையில்—பாராள வந்தவர்களால்! பலம்—அதிகாரத்தால் உருவான வலிமை—ஆளவந்தார்களுக்கு, நிலையாக உள்ள சட்டங்களையும், மன்றங்களையும், அறங் கூறுவோரையும் அலட்சியப் படுத்தி, ஆளும் துணிவைக் கொடுக்கிறது. பலம்-மிருகபலம்—காட்டு முறை-காட்டில வாலாட்டுகிறது!

"ஓடாதே! எத்தனை நாளாகத் தேடுவது உன்னை! வா!"

"எங்கே! அழைக்கிறீர்? ஏன் அழைக்கிறீர்?"

"இதுகூடவா தெரியாது உனக்கு?"

"தெரியாதே! நான் செய்த குற்றம்?"

"கூற முடியாது! அறியேன் நான்! அறிந்தாலும் கூறேன் நான்!"

"நான் ஒரு பிரஜை! காட்டிலே தடையின்றி நடமாட எனக்கு உரிமை இல்லையா?"

"உரிமை உண்டு! உனக்கல்ல!"

"ஏன்? என்ன குற்றம் செய்தேன் அப்படி?"

"முடியாது! கூற முடியாது தண்டிப்பாக! கிட சிறையிலே!"

இப்படிப் பலரை - தாங்கள் செய்த குற்றத்தைத் தெரிந்து கொள்ள முடியாத பலரை-சென்னை சர்க்கார், விருந்தாளிகளாகக் கொண்டுள்ளனர்.

'நீதிமன்றம்ஏறுங்கள்! நாங்கள் இழைத்த தீங்கையும் ஒன்று விடாமல் கூறுங்கள்! நீதிபதிகள் உள்ளனர்! சட்டங்கள் துணைக் கொண்டு எங்களைத் தண்டிக்கட்டும், அவர்கள்!" இது சாதாரண கோரிக்கை. உண்மை உணர்ந்தால்-உணர்த்தப்பட்டால்-உரிமை வாழ்வின் உயர்வு தெரிந்தவர்கள் அனைவரும், ஒரு மிக்க குரல் எழுப்புவர் "ஆளாள்வோரே! உரிமையைக் கொலை செய்யாதீர்கள்!" என்று

வல்லூறுக்குமுன் புறு பயப்படுவதுபோல், புலிக்கு முன் மான் நடுங்குவதுபோல், பூனைக்கு முன் எலி அஞ்சுவதுபோல், ஆளவந்தார்கள் முன் மக்கள் முன்னேற்றத்திற்குப் போராடுகிறவர்கள் பணிபத்தான் வேண்டுமா? பயப்படத்தான் வேண்டுமா? அஞ்சி அஞ்சி உயிரோடு இருக்கத்தான் வேண்டுமா?

நீதிபதி பணிபுரிய, இவர்களுக்குப் பயிற்சிதான் உண்டா? நடுநிலைப்பண்பாடு இவர்கள் உள்ளங்களில் இலகுவில் இடம் பெறுமா? ஏன் ஆளவந்தார்கள் அறங்கூறும் அரும்பணியாற்ற முந்துகிறார்கள்? இவர்கள் வழங்கும் நீதி, ஒரு கட்சி (Exsecutive Justice) சார்புடையதாக இருக்கமுடியுமே யன்றி, எப்படி நேர் நீதிமுறையாக இருக்கமுடியும்?

இன்று பலர், சுதந்திரமாக நடமாடும் உரிமைபறிக்கப்பட்டு-பேச்சுரிமை தடுக்கப்பட்டு-எழுத்துரிமை மறுக்கப்பட்டு-காதல் கிழத்தியையும், மகிழ்ச்சியூட்டும் மக்களையும், பாதுகாப்பாற்றப்படவேண்டிய பெற்றோர்களையும், உற்றார் உறவினர்களையும், கண்டு மகிழும் வாய்ப்புக்கொலை செய்யப்பட்டுச்சிறைச் சாலைகளிலே அடைக்கப்பட்டுக் கிடக்கின்றனர். அவர்களுக்கு; அவர்புரிந்த குற்றங்கள் அறிவிக்கப்படவில்லை. குற்றங்களை தெரிவிக்கப்படாமல் இருக்கிற பொழுது, அவர்கள் மறுத்துக் கூறுவது எங்கே? ஆளவந்தார்களை நீதி வழங்கும் முறையை, அறவே கைவிட்டு விட வேண்டும்—இல்லை-சில நாளைக்காவது நீதிமன்றங்களுக்கு அப்பொறுப்பை விட்டுவிட முன்வர வேண்டும்.

உணவைப் பெருக்கும் பணியில் ஈடுபடட்டும்! வேண்டுமானால், வேரை மண்ணுக்கடியில் புதைத்துச் செடி நடும் வித்தையைக் காட்டிவரட்டும்! ஊர் ஊராகச் சென்று கட்சிப்பிரசாரம் செய்யட்டும்! இவைகளை எல்லாம் கேட்பதில்லை என்று வேண்டுமானாலும், நாம் உறுதி கூறத் தயாராக இருக்கிறோம்! நீதியிலே குறிக்கிடும் கோணல் மதியை மட்டும்-இன்றே-விட்டு விடக் கோருகிறோம்.

பாது காப்புக கைதிகளின் விடுதலை மனுக்களைக் கவனிக்க ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட ஆராய்ச்சிக் குழு ஒன்றினால் மட்டும் முடியவில்லையாம். பாதுகாப்பில ஒன்றிரண்டு நபர்கள் இருந்தாலல்லவோ, ஆராய்ச்சிக் குழுவின் அலுவல் விரைவில முடிய! நூற்றுக்கணக்கில் அல்லவோ பாதுகாப்புக் கைதிகள் என்று உள்ளனர்! எனவே, மற்றொரு ஆராய்ச்சிக் குழு ஒன்று புதிதாக நியமிக்கப் படுகிறது சர்க்காரால்.

இந்த ஆராய்ச்சிக் குழுவிற்கும் முடிவு கூறத்தான் உரிமையுண்டு. கண்ட முடிவை நிறைவேற்ற-பாதுகாப்புக் கைதிகளை விடுதலை செய்யும் உரிமை கிடையவே கிடையாது. முடிவைச் செயலாற்றும் உரிமை ஆளவந்தார்களுக்குத்தான்! வெறும் கண்துடைக்கும் வீண்வேலை குற்றமுள்ள நெஞ்சின் சிறு செயல் இது! இதனால் ஆளவந்தார்களின் மீது சுமத்தப்படும் குற்றங்கள் மறைந்துவிடாது.—இதனால் மறைக்கவும் முடியாது.

நீதி வழங்க நீதிமன்றங்களுக்கு உரிமை வழங்குங்கள். அப்பொழுதுதான்; தெரிந்துகொள்ளமுடியும் பாதுகாப்புக் கைதிகளின் கேடுவிலையை. அந்தநிலை ஏற்படுத்தப்படாதவரையில, 'நிரபாதிகள் சிறையிலே தள்ளப்பட்டுள்ளார்கள் இந்தச் சர்க்காரால்' என்ற அவச்சொல், ஆளவந்தார்களை விட்டு விலகாது—விலகாது!

ஆளவந்தார்களின் போக்கு—மனிதப் பண்பல்ல! புலியின் போக்கு — மிருகப் பண்பு! காட்டு நீதி—காட்டில்— மக்கள் நீதியாக இருக்கக்கூடாது. மனிதப் பண்பு வளரட்டும் நாட்டில் —வளர்க்க முயலட்டும் ஆளவந்தார்கள்!

அகில உலக விமான நிலையம்



அமெரிக்காவில் லீட்டில் என்ற இடத்தில் அகில உலக விமான நிலையம் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. அதன் பொதுத்தோற்றமே படத்தில் காட்டப்பட்டிருப்பதாகும். விமான நிலையத் திறப்பு விழாவன்று 10,0000க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு கண்டுகளித்தனர். இந்தவிமான நிலையம் 920 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். இதில் விமானம் இறங்கி ஓடும் வழி 6100 அடிகள் நீளம் இழுக்கப்பட்டிருக்கிறது. இது 7500 அடிகளுக்கு இன்னும் இழுக்கப்படவும் கூடும். மேலும் பல விமானம்-ஓடும்-வழிகள் போடவும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

காஷ்மீர் பிரிவினை

காஷ்மீர், இரண்டு பாகமாக கப்பட்டுவிடுமாம்.

காஷ்மீர்—பெரிதும் முஸ்லிம்கள் வாழும இடம்.

ஜம்மு—இந்துக்கள் வாழும் இடம.

ஜம்மு—மட்டுமே இந்தியாவுடன் இணைக்கப்படுமாம.

இந்தத் திட்டத்தையே அமெரிக்கத் தலைவர் ட்ரூமனும், பிரிட்டிஷ் முதல மந்திரி அட்லியும, வலியுறுத்துகின்றனராம.

இந்தப் போக்குக்குக் காரணம, பாகிஸ்தான பிரதமர் லியாகத் அலிகான காட்டியுள்ள ராஜதந்திரமேயாகும்.

சோவியத் ரஷியாவுடன், அவர சரசமாடத் தொடங்கியது, அமெரிக்காவுக்கு அச்சத்தையும் பிரிட்டனுக்குப் பீதியையும் உண்டாக்கிவிட்டது. எப்படியாவது, பாகிஸ்தான் ரஷியாவுடன் சேர்ந்து கொள்ளாதபடி தடுத்தாக வேண்டும் என்று தீர்மானித்தனர்— எனவேதான், காஷ்மீர் பாகிஸ்தானுக்குக் கிடைக்கும் என்ற ஏற்பாட்டைக் காட்டுகின்றனர் — லியாகத்துக்கு.

இந்தப் பிரிவினைத் திட்டத்துக்கு, முன்னேற்பாடு போன்றதுதான, அட்லி—ட்ரூமன அறிக்கை என்று, 'பிளிட்ஸ்' நிருபர் கூறுகிறார்.

ஆயிரம் அணுகுண்டு...

(1-ம பக்கம் தொடர்ச்சி)

இருக்கும்—பிறகு பெரும்போர் மூண்டுவிடும், என்று,நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அழிவுத் திட்டத்துக்காக அமெரிக்கா, பெரும் பொருளைச் செலவிடவேண்டி வருமாம். ஒரு அணுகுண்டு தயாரிக்க, 1,000,000 டாலர் செலவாகுமாம்!

இவ்வளவு பணம் செலவிட்டு, சோவியத்தைப் படுசூரணமாக்குவதற்காகவே, அமெரிக்கா, செல்வத்தைச் சேகரித்து வைத்திருக்கிறது.

அணுகுண்டு செய்ய அதிகச் செலவு பிடிக்கும்- இதைவிடக் குறைவான செலவில், எம்மிடம் ஓர் அழிவுக் கருவி இருக்கிறது, அதன் பெயர், மரண ஒளி, என்று மாஸ்கோ நிபுணர்கள் கூறுகின்றனர். அணு குண்டு தயாரிக்கும் முறை, எமக்கும் தெரியும், அதைவிட அற்புதமான 'மரண ஒளி' இருக்கும் போது, எமக்கென்ன கவலை,என்கிறார்கள், சோவியத் தலைவர்கள்.

ஒருபுறம் அணுகுண்டு! மற்றோர்புறம், மரண ஒளி! இரண்டிற்கிடையே, கோடிக்கணக்கான சூதுவாதறியாத மக்கள்! உலகு இன்று இந்நிலையில் இருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து அணுகுண்டு! மாஸ்கோவிலிருந்து மரண ஒளி!! இவைகளைத் தயாரித்துக் கொண்டே, ஐக்கிய நாடுகள் சபையிலே, சமாதான கீதமும் பாடுகிறார்கள். என்ன கபடம்! எத்தனை நயவஞ்சகம்!!

கழகத் தோழர் மறைவு

அய்யன்பாளையம், செப் 11—

அய்யன்பாளையத்தில் திராவிடர் கழகத்தில் தீவிரப் பங்குகொண்டு உழைத்தவரும், அய்யன்பாளையம் கர்ணம அழகியசுந்தரனாரின் குமாரருமான தோழர் தீனதயாளன் அவர்கள் 10-9-49 சனியன்றுகாலை 5-மணிக்கு இயற்கை எய்தினார்கள். அவரது குடும்பத்தார்க்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாக தமிழரில்லம் மாணவர் குழாம் உறுப்பினர்கள் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

கல்கத்தாவில் புதிய தொழிற்சாலை

பிரிட்டிஷ் கம்பெனியுடன் பிர்லா ஒப்பந்தம்

இந்தியாவுக்குத் தேவையாக உள்ள பாய்லர்களை உற்பத்தி செய்வதற்காக, பாப்காக்- வில்காக்ஸ் லிமிட்டெட் எனும் கம்பெனியுடன் பிர்லா கம்பெனியார் ஒப்பந்தம் ஒன்றை அண்மையில் செய்து கொண்டதின் பலனாக, கல்கத்தாவுக்கருகில் அகர்பாரா என்னுமிடத்தில் ஒரு தொழிற்சாலையைத் துவக்க ஏற்பாடு செய்துள்ளனர். 47,000 சதுர அடி அளவுள்ளதாகத் தொழிற்சாலை அமையும். 1950-ல உற்பத்தி வேலை துவங்கும்.

இந்த ஒப்பந்தப்படி பர்மிங்காம (இங்கிலாந்து) நகருக்கருகில் உள்ள ஒல்பெரி என்னும் ஊரில் அமைந்துள்ளபாப்காக்-வில்காக்ஸ்தொழிற்சாலையில் சில இந்திய இஞ்சினியர்கள் பயிற்சி தரப்படுவார்கள்.

"தமிழரசி" தோற்றம்!

கள்ளக் குறிச்சி, செப், 11—

கோவல் தோழர் ம. ரா. குமாரசாமியார் அவர்களின் இளைய மகனும், இவ்வூர் தி. க. செயலாளருமான தோழர் குமார-தனிகாசலம் அவர்கள் துணைவியாருக்கு 27—8—49-ல் பிறந்த பெண் மகவுக்குத் "தமிழரசி" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் மூன்று வரப் பெறறோம். மகிழ்ச்சி!

அறிவிப்பு

மாலை மணி ஏஜண்டுகளில் சிலர் மாலை மணி இதழ்களை ஒரு அணு முதல் இரண்டணு வரையில் விறபதாகவும, மற்றத் தினசரிகளில் ஒன்று வாங்கினால் தான் மாலை மணி பிரதி கொடுப்பதாகக் கூறுவதாகவும் பல புகார்கள் வந்துள்ளன. அம்மாதிரி நடக்கும ஏஜண்டுகளுக்கு முன் அறிவிப்பின்றிப்பிரதிகள் அனுப்புவது நிறுத்தப்படும்,

மானேஜர்: மாலை மணி.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.